இலவச பிரதி

Registered as a NewsPaper


விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-26 | 11-09-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-206


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247
(சி-12761)

# புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை

# அரசாங்கம் மேற்கொள்வது அவசியம்!

## இலங்கைக்கான முன்னாள் அமெ.தூதுவர் ஸ்காஃபர்

(வோஷிங்டன்)

***இலங்கை அமைதிப் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகளே தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகின்றனர். விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசு நேரடிப் பேச்சுக்களை அவசியம் மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரெசிட்டா ஸ்காஃபர் அம்மையார் தெரிவித்துள்ளார்.***

அமெரிக்காவின் வோஷிங்டனில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் ஸ்காஃபேர் அம்மையார் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்கிவிடலாம் என்பது சாத்தியமற்றது தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக கட்டுப்படுத்திவிடலாம் என்பது நிகழும் என நம்பமுடியாதது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை மாற்றிவிடுவதால் இனப்பிரச்சினையின் தன்மை மாறிவிடப்போவதில்லை. இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பாரிய அரசியல் மாற்றங்கள் உருவாக வேண்டும். தற்போதைய சனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் மூலம் அமைதி முயற்சிக்கான வாய்ப்புக்களைத் தூர எறிந்துவிடக் கூடாது என (12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா இன்று அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று அமெரிக்கா செல்லவுள்ளார். அவருடன் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டார நாயக்க, அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யு. குணசேகர மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரும் அமெரிக்கா செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

187 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்த வருடாந்த மாநாட்டில் கலந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவன் வெட்டப்பட்டு படுகாயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் வெட்டப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

மூன்று உந்துருளிகளில் வந்த ஆறுபேர் கொண்ட குழுவே இவரை வெட்டிவிட்டுச் சென்றுள்ளனர். தவசிக்குளம் கொடிகாமத்தைச் சேர்ந்த சுந்திரன் ஜெயராஜ் (வயது 20) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நவீன சந்தையின் வெளிப்புற வாசலுக்கு அருகில் உள்ள தேநீர்க் கடைக்கு முன்பாக வைத்தே இவர் வெட்டப்பட்டுள்ளார். (20)

## மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வென்றால் 2006 ஆம் ஆண்டு யுத்த ஆண்டு

*-தமிழ்தேசியக் கூட்டமைப்பு பா.உ சிவாஜிலிங்கம்*

(கொழும்பு)

சிங்களத் தீவிரவாதிகளிடம் சரணடைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ, சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு யுத்த ஆண்டாகத்தான் இருக்கும் என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வானொலி ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் அவர் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார். சிங்கள தேசத்துக்கான சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்தேசியக் கூட்டமைப்பு எவ்வித முடிவும் மேற்கொள்ளவில்லை. ஆனால் எமது தமிழீழ தேசம் அங்கீகரிக்கப்படாத நிலையில் சிங்கள தேச சனாதிபதித் தேர்தல் தொடர்பாக கருத்துத்தெரிவிக்க வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதியன்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி- ராஜபக்ஷ ஒப்பந்தம் சு.க.கொள்கைக்கு எதிரானது

### சனாதிபதி சந்திரிகா கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜேவிபியுடன் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தம். சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுக்கு எதிரானது என்று அக்கட்சித் தலைவரும் சனாதிபதியுமான சந்திரிகாகுமாரதுங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குச் சந்திரிகா குமாரதுங்க அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் பொதுசன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளுக்கு எதிரானதாகவே இந்த ஒப்பந்தத்தின் சரத்துக்கள் உள்ளன.

மகிந்தராஜபக்ஷ மீதான கோபத்தை வெளிப் படுத்தும் வகையில் பாராளுமன்ற கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படக் கூடும் என்று கூறப்படுகிறது. ஆனால் அது குறித்து கருத்துத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனுத்திகதியை அறிவிப்பதில் தேர்தல் ஆணையாளருக்கு சிக்கல்!

(கொழும்பு)

சிறிலங்காவில் தேர்தல் நடைபெறும் திகதி, வேட்பு மனுத்தாக்கல் செய்வது எப்போது என்பன பற்றி அறிவிப்பதில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க பெரும் சங்கட நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

கடந்த12 ஆம் திகதி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் இறுதிப் பந்திக்கும் அரசியலமைப்புக்குமிடையில் முரண்பாடு காணப்படுவதால் அவர் உயர் நீதிமன்றத்துக்கு மனு ஒன்றை சமர்ப்பித்திருப்பதாகவும்அதற்குத் தீர்ப்பு வழங்கப்படும் வரை இவர் வேட்புமனுத்தாக்கல் செய்யும் தினத்தை அறிவிப்பதை நிறுத்தி வைத்துள்ளார் எனத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் குண்டுவெடிப்பு

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இக் குண்டு வெடிப்பால் குறிப்பிடத்தக்க சேதங்கள் ஏதுவும் இல்லை. ஏறாவூர் சிறிலங்கா பொலீஸ் நிலையத்தில் பணியாற்றும் எம்.எச்.எம்.ஜனுதீனின் வீட்டிற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரத்தைத் தக்கவைக்கவே தேர்தல் காலக் கூட்டணிகள் முயல்கின்றன

*ஐ.தே.க சனாதிபதி வேட்பாளர் ரணில்*

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் பல கூட்டணிகளை உருவாக்கும் அரசியல்வாதிகள் பின்னர் அதனை மறந்துவிட்டு அதிகாரத்தை தக்க வைத்து கொள்ள முற்படுவதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குடும்ப அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் சாதாரண வகுப்பு மக்கள் வலுவுடன் முன்னேறுவதை தடுப்பதற்காகவும் கூட்டணிகளை ஏற்படுத்தி கொள்வதாக ரணில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறை போராளிகளை அழைத்துவரக் கோரி கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு

(மன்னார்)

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து வெளியேறிய விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் போராளிகளை மீள அழைத்துவரக் கோரி போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழவிடம் மன்னார் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார், பேசாலை மீனவர் அமைப்புக்களின் 12 பேர் கொண்ட பிரதிநிதிகள், வர்த்தகர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு நேற்று முன்தினம் மன்னாரில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சந்தித்தது.இச்சந்திப்பு ஒரு மணிநேரம் நீடித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் போராளிகள் வெளியேறுவதால் தாங்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும், நிராயுதபாணிகளாக அரசியல் பணி மேற்கொள்ளும் விடுதலைப் புலிகளுக்கு உரிய பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மட்டு. "ஈழநாதம்" விநியோகிக்கத்தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகையினை நேற்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விநியோகிப்பதற்குப் படையினர் தடைவிதித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளிவரும் இந்தப் பத்திரிகை விடுதலைப் புலிகளுடையது எனத் தெரிவித்த படையினர்' தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விநியோகிக்கக் கூடாது எனத் திருப்பி அனுப்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஒன்றரை வருடகாலமாக வெளிவரும் இந்தப் பத்திரிகை சுவடிகள் திணைக்களத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### உடனடியாகத் தேவை

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியை அண்டியபகுதியில் ஆசிரியை ஒருவருக்கு தங்குவதற்கு தனி அறை/பகுதி அறைதேவை. தொடர்பு- N/S ஜீவரட்ணம்; 28/1 பிரப்பங்குளம்வீதி, யாழ்ப்பாணம். T.P 077- 6916199 (சி.12694)

### சேவை

தங்கள் இல்லங்களில் நடைபெறும் விசேட கொண்டாட்டங்களிற்கு சிறந்த முறையில் சமையல் செய்து கொள்வதற்கு தொடர்புக்கு இ.சக்திவேல், இல.6 உதயநகர் மேற்கு, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.(6679)

### விற்பனைக்குண்டு

கிளி/155 ஆம் கட்டை A9 பாதைக்கு (வைலசிற்கு அருகில்) சமீபமாக 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு தொடர்புக்கு A.S ஜெயந்தன், இல.77 விவேகானந்த நகர், கிளிநொச்சி. T.P 077-6424349 (6698)

## சாவு அறிவித்தல்

### திருமதி கந்தசாமி அமுதவல்லி

கருகம்பனை -காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இல:70, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது நெல்லியான் வீதி, சுழிபுரம் சந்தி, சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி அமுதவல்லி 10.09.2005 சனிக்கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரன் (விதானையார்-சுழிபுரம்) மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பு, தங்கப்பிள்ளையின் அன்பு மருமகளும், கஜித்தா, பகீரதன், சுரேகா,சைலா, டிலக்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரவல்லி,ஞானவல்லி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.09.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது சகோதரியின் இல்லத்தில் (சுழிபுரம்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9.00 மணிக்கு திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

த.முகவரி:-
நெல்லியான் வீதி,
சுழிபுரம் சந்தி, சுழிபுரம்

தகவல்:-
த.கந்தசாமி (கணவர்),
(பன்னாலை,ஸ்கந்தபுரம்)

(சி.12649)

# கள்ளப்பாடு கிராம மக்களுக்கு நிரந்தர வீட்டிற்கான அடிக்கல்நாட்டல்

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு தமது வாழ்விடங்களை இழந்த கள்ளப்பாடு கிராமமக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் நிர்மாணிக்கப்படும் நிரந்தர வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு கிராமத் தலைவர் மா. குணசிங்கராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லை.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வம் ஏற்றினார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடியினை சுனாமித்திட்ட கட்டமைப்பு தமிழர் புனர்வாழ்வுகழகப் பணிப்பாளர் வின்சன் ஏற்றினார்.

பெயர்ப் பலகையினை திட்டமிடல் பணிப்பாளர் ரஞ்சன் திரைநீக்கம்செய்தார். தொடர்ந்து திருமதி அ.இராசமாணிக்கத்தின் வீட்டிற்கான அடிக்கல்லினை யுனிசெவ் பிரதிநிதி ஜெனி, திட்டமிடல் செயலக முல்லை. கிளைப் பணிப்பாளர் யாழ் அமுதன், கரைதுரைப்பற்று முன்னைநாள உதவி அரச அதிபர் மு. காசிப் பிள்ளை ஆகியோர் நாட்டினர்.

இரண்டாவது வீடான அ.சறோஜினியின் வீட்டிற்கான அடிக்கல்லினை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. ரங்கன், வேள்விசன் நிறுவன நிர்வாக அலுவலர் அ.விமல்ராஜ்,பொறியியலாளர் இராமேஸ்வரன், த.பு.க.உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இரவிச்சந்திரன் ஆகியோர் நாட்டினர். (20)

# புது. பொன்னம்பலம் மருத்துவமனையில் இதய மருத்துவ நிபுணர் சிகிச்சை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவ மனையில் அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் இதய மருத்துவ நிபுணரினால் நாளை தொடக்கம் வியாழக்கிழமை வரை காலை எட்டு மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை நோயாளர்கள் பார்வையிடப்பட்டு சிகிச்சையும், ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது.

குறிப்பாக இருதய நோய்கள், மாரடைப்பு, உயர்குருதியமுக்கம்,இருதய கட்டமைப்பில்பாதிப்பு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு விசேட கருவிகளினால ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சையும், ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது. பயன்பெற விரும்புவோர் வெளி நோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# பூநகரி வாடியடி பகுதியில் சுகாதார விழிப்புணர்வு செயற்பாடு

கிளிநொச்சி பூநகரி வாடியடிப் பகுதியில் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடு ஒன்று இடம் பெற்றுள்ளது.

தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்கு படுத்தலில் இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது. இப் பகுதியிலுள்ள உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு இச் சுற்றாடல் பகுதி சுத்திகரிப்புச் செய்யப்பட்டன.

பொது இடங்கள் பூநகரிப் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் சுத்திகரிப்புச் செய்யப்பட்டன. கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டதுடன், மருந்து தெளிவு கருவி மூலம் தொற்று நீக்கி மருந்து விசிறப்பட்டது.

சந்தை மற்றும் பொது இடங்களில் கழிவுப் பொருட்கள் இடுவதற்கான பரல்கள் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# கண்காட்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய பிரதேசக் கட்டமைப்பின் ஆதரவுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் முன்வைக்கப்படும் அக்கராயன் பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான கண்காட்சி நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது.

காலை 9.00 மணிக்குக் கந்தபுரம் இல-01 அ.த.க.பாடசாலையில் இந்தக்கண்காட்சி நிகழ்வு இடம் பெறும்.

# கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட கல்வி,சுகாதாரக் குழுக் கூட்டங்கள் எதிர்வரும் 19ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு நடைபெறுமென அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.



# 'கற்றினா' சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்பை சீர்செய்ய நிதி வழங்க ஒப்புதல் வழங்கியது அமெரிக்க பாராளுமன்றம்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் கற்றினா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இரண்டு இலட்சத்து 33 ஆயிரத்து 100 கோடி தொகையை வழங்க அந்நாட்டு பாராளுமன்று நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்தது. இதையடுத்து நிவாரண பணிகளுக்காக ஒட்டு மொத்தமாக ரூபா இரண்டு இலட்சத்து 80 ஆயிரத்து 350 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



அதிபர் புஷ் முன்வைத்த இந்த நிதி ஒதுக்கீட்டு கோரிக்கைக்கு எதிர்கட்சியினர் முழுமையாக ஒப்புதல் அளித்தாலும், விவாதமின்றி மசோதா நிறைவேற்றப்படுவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். குறிப்பாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் அவசரகால மேலாண்மை நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றி கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. அது குறித்து விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

மீட்புப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று அதிபர் புஷ் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறார். தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் தங்களுக்கு உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று புகார் கூறியுள்ளனர். இதைச் சரி செய்ய புஷ் உத்தரவிட்டுள்ளார். இதற்காக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு துணை அதிபர் டிக் செனியை அதிபர் புஷ் அனுப்பியுள்ளார். மிசிசிபி பகுதியில் நேற்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த டிக்செனி நிவாரணப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என்றும் உறுதி கூறினார்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவுக்கும் கற்றினா சூறாவளியால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ரூபா4 ஆயிரத்து 950 கோடி அளவுக்கு நாசாவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட தகவல்கள் தெரி விக்கின்றன. நியூ ஓர்லியன்ஸ் நகரில் நாசாவின் மையம் ஒன்று செயற்பட்டு வந்தது. அங்கு விண்வெளிஓடத்துக்கு தேவையான எரி பொருள் தாங்கிகள் தயாரிக்கப்பட்டு வந்தன. அதேபோல் மிசிசிபி மாகாணத்தில் செயின்ட்லூயிஸ் என்ற இடத்தில் விண்வெளி ஓடத்தின் ஏவுகணை மோட்டார்களை பரிசோதனை செய்யும் கூடம் செயற்பட்டுவந்தது. இந்த இரண்டு இடங்களும் சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ளன. அவை மீண்டும் முழு வீச்சில் செயல்பட ஒரு வருடமாகும் என்று கூறப்படுகிறது.

கற்றினா சூறாவளிக்கு பின் அதிபர் புஷ் அரசு மீது அமெரிக்க மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர். சூறாவளி பாதிப்புக்கு பின் நாட்டின் பல பகுதிகளில் பல்வேறு நிறுவனங்கள் சார்பில் மக்களிடம் கருத்துக் கணிப்புக்கள் எடுக்கப்பட்டன.67 சதவீத மக்கள் நிவாரணப் பணிகளை இன்னும் சிறப்பான முறையில் அதிபர் புஷ் செய்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு பின் தீவிர வாத அழிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்த அமெரிக்க மக்கள் தற்போது உள்ளூர் பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர். அந்தளவுக்கு சூறாவளிப் பாதிப்பு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சூறாவளி ஏற்படுத்தியுள்ள பொருளாதாரப் பாதிப்பு அனைத்து தரப்பு மக்களையும் கவலை கொள்ள செய்துள்ளது என்று கருத்து கணிப்புக்கள் தெரிவித்துள்ளன.



நியூஓர்லியன்சில் நோயாளி ஒருவர் படகு மூலம் அழைத்து வரப்பட்டு ஒரு பேருந்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றார்.

## இறந்தவர்கள் எத்தனைபேர் தொடரும் குழப்ப நிலை

அமெரிக்காவில் கற்றினா சூறாவளியால் இறந்தவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தை தாண்டும் என்று சில நாட்களுக்குமுன் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து உடல்களை தேடும் பணி நடப்பதால் இன்றுவரை இறந்தவர்களின் எண்ணிக்கையை உறுதியாக கூற முடியவில்லை. இறந்தவர்களின் உடல்களை கொண்டு செல்ல 25 ஆயிரம் பைகளை அதிகாரிகள் தயார் நிலையில் வைத்துள்ளனர் என்ற தகவல் மட்டும் அரசு தரப்பில் இருந்து தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் பாதிக்கப்பட்டவர்கள் பலர் தங்களது செல்லப் பிராணிகளை காணவில்லை என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர். அந்த செல்லப் பிராணிகளைத் தேடும் பணியிலும் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சி.என்.என் தொலைக்காட்சிக்கு மீனவர் ஒருவர் தெரிவிக்கையில், நியூ ஓர்லியன்ஸ் நகரின் கிழக்குப் பகுதியிலுள்ள மருத்துவமனை ஒன்றில் 14 உடல்களையும் மற்றொரு பகுதியில் 30 உடல்களையும் பார்த்ததாக அவர் தெரிவித்துள்ளார். இன்னும் அந்தப் பகுதியை மீட்புப் பணியினர் சென்றடையவில்லை என்றே கூறப்படுகிறது.

---

அணுசக்தி தொழில் நுட்பம்

# பாகிஸ்தானின் கோரிக்கையை நிராகரித்தது அமெரிக்கா

அணுசக்தி தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்குவது போல் எங்களுக்கும் அதை அளிக்க வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

ஆக்கபூர்வ நோக்கத்துக்குப் பயன்படும் சிவிலியன் அணுசக்தி தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது அமெரிக்கா.

இந்நிலையில் இந்தியாவுக்கு நிகராக தம்மையும் கருதி அந்தத் தொழில் நுட்பத்தை வழங்க வேண்டும் என்று பாகிஸ்தான் கோரியிருந்தது. இது பற்றி குறிப்பிட்ட சர்வதேச பாதுகாப்பு மற்றும் ஆயுதக் கட்டுபாட்டுத் துறை அதிகாரி ஜி.ஜோசப் வியாழக்கிழமை கூறியதாவது;

அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா இடம் பெறவில்லை என்றாலும், இந்தியாவை விதிவிலக்கான நாடாக அமெரிக்கா கருதுகிறது. சர்வதேச அளவில் அணுவாயுதங்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்த உறுதி பூண்டுள்ளது இந்தியா, அதன் நோக்கம் நிறைவேறும் வகையில் இந்தியாவுடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க உடன்பாட்டை அமெரிக்கா செய்து கொண்டது.

அணுசக்தி தொழில்நுட்பத்தைஇஸ்ரேல், பாகிஸ்தானுக்கு வழங்க முடியுமா என்று சில நாடுகள் கேட்டு வருகின்றன. இந்தியா,இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகியவற்றுக்கு தனித்தனி அணுகுமுறை தேவை. பாகிஸ்தான், இஸ்ரேலிடம் ஆக்கபூர்வ சிவில் அணுசக்தி திட்டங்கள் இல்லை. எனவே இந்தியாவுக்கு நிகராக அவற்றைக் கருதமுடியாது. இஸ்ரேல், பாகிஸ்தானுடன் சிவில் அணுசக்தி தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கு வாய்ப்பு இல்லை என்றார் ஜோசப்.



மத்திய தரைக் கடற்பகுதியில் முன்னர் யூதக் குடியிருப்புக்கு அருகே இருந்த தமது முகாம்களை வாபஸ் பெற்ற இஸ்ரேலியப் படையினர் கலந்துரையாடுகின்றனர்.

# பப்புவா நியூகினியாவில் பாரிய நிலநடுக்கம்

பசுபிக் கடலின் தென் மேற்குப் பகுதியிலுள்ள தீவான பப்புவா நியூகினியாவில் நேற்று முன்தினம் மதியம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் இது 7.3 என பதிவாகியிருந்தது. இதனால் சுனாமி ஆபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நியூகினியாவின் ரபவுல் நகரிலுள்ள ஜரிமா அட்லீஸ் என்ற பெண் உணவு விடுதி தொழிலாளி தொலைபேசி மூலம் இது பற்றிக் கூறுகையில் இங்குள்ள மக்கள் நிலநடுக்கத்தை உணர்ந்தனர்.

இது ஒரு சாதாரண அதிர்வு தான் இதனால் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை. நகரில் எந்த சேதமும் இல்லை. மிகப் பெரியதாக ஒன்றும் இல்லை. கடந்த 1994 ஆம் ஆண்டு இங்கு எரிமலை வெடித்தது இதே போல் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அருகிலுள்ள பல பகுதிகள் பயங்கரமாக சேதமடைந்தன. இதைச் சரி செய்ய நீண்ட நாட்கள் பிடித்தது என்றார்.

ஜப்பானில் நில நடுக்கத்தை கண்டறியும் துறையில் பணி புரியும் அதிகாரி ஷின்ஜிரோதாரி இது குறித்து கூறுகையில் இந்த நிலநடுக்கத்தினால் சுனாமி பேரலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை ஏனெனில் பூகம்பம் மையம் கொண்டுள்ள இடம் மிகவும் ஆழமாக இருக்கிறது என்றார்.

# பராமரிப்புக் கட்டணம் செலுத்தாததால் ஈராக் விமான நிலையம் மூடப்பட்டது

(பாக்தாத்)

பாக்தாத் விமான நிலையத்தை பராமரிக்கும் பிரிட்டன் நிறுவனத்திற்கு ஈராக் அரசு பராமரிப்புக் கட்டணத்தை செலுத்தாததால் கடந்த மூன்று மாதங்களில் இரண்டாவது முறையாக நேற்றும் விமான நிலையம் மூடப்பட்டது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள விமான நிலையம் ஒரு பிரிட்டன் தனியார் நிறுவனம் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தால் 550 பாதுகாப்பு வீரர்களைக் கொண்டு பராமரித்து வரப்படுகிறது. இந்த வீரர்களில் பெரும்பாலானவர்கள் நேபாளத்தின் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் பிரிட்டன் குர்கா யூனிட்டைச் சேர்ந்தவர்கள். இதற்கு ஈராக் அரசு ஒவ்வொரு மாதமும் பராமரிப்புத் தொகையாக குறிப்பிட்ட அளவு பணம் கட்டி வருகிறது.

கடந்த ஏழுமாதங்களாக பராமரிப்புக் கட்டணம் செலுத்தாத காரணத்தினால் விமான நிலையத்தை பிரிட்டன் நிறுவனம் நேற்று மூடி விட்டது.

ஈராக் போக்குவரத்து அமைச்சர் கில்ஸ் மார்கனும் பணம் செலுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பாக கூறுகையில்;"கடந்த ஏழு மாதங்களாக'குளோபல் ஸ்டேட்ஜிஸ் குரூப்'என்ற பிரிட்டன் நிறுவனத்திற்கு பராமரிப்பு தொகைசெலுத்தவில்லை.இந்த பண விவகாரத்தினை இன்னும் சில மணி நேரங்களில் சரிசெய்து விடுவோம்"என்றார்.

பிரிட்டன் நிறுவன அதிகாரி ஒருவர் கூறுகையில்; "கடந்த ஜூன் மாதத்தில் இதே போல் சரிவர கட்டணம் செலுத்தாததால் விமான நிலையத்தை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனை தடுக்க முடியவில்லை. இந்த முறையும் திரும்ப நடந்திருக்கிறது பண விவகாரம் தொடர்பாக ஈராக் உயரதிகாரிகளிடம் எங்கள் நிறுவன அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்திப்பார்த்தனர். இதுவரை அவர்கள் கட்டணத்தினை செலுத்தவில்லை. அவர்கள் பராமரிப்புக் கட்டணத்தினை செலுத்தியவுடன் விமான நிலையம் போக்குவரத்திற்கு திறந்து விடப்படும். " என்று கூறினார்.



மும்பையில் கடும் மழை காரணமாக வீதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

# தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களுக்கு அனைவரும் உறுதியுடன் செயற்படுவோம்

## -அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அழைப்பு



(அலுவலக செய்தியாளர்)

**"எம்தேசத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களுக்கு அனைவரும் உறுதியுடன் செயற்படுவோம்" இவ்வாறு அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நேற்று கிளிநொச்சி ஜெயந்திநகரில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.**

மாவீரர், போராளிகள் குடும்ப நலன்காப்பகத்தின் பெண்கள் வேலைத்திட்டப்பகுதியினரால் ஒளிர் வன்னி ஆடைத்தொழிலகத்தில் பயிற்சி பெற்ற ஒளிர் தையலகங்களில் வேலை வாய்ப்பினை பெறுபவர்களுக்கு தொழில் பயிற்சிச் சான்றிதழ் தொழில் உபகரணங்கள், தொழில் நிலைகட்டடத்திற்கான நிதியினை வழங்கி வைத்து உரைநிகழ்த்துகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இங்கு வழங்கப்பெற்றுள்ள பயிற்சியுடன் அதற்கான உபகரணங்களும் வழங்கப்பெற்றுள்ள



தன் மூலம் உங்களை முழுமனிதர்களாக உருவாக்கிக் கொள்ள வாய்ப்பேற்படுத்தப்பட்டுள்ளமையானது எமது தேசியத் தலைவரின் சிந்தனையை முழுமையாகச் செயற்படுத்துகின்ற ஒரு நோக்கமாகக் கொண்டவாய்ப்பாக நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு உயர்ச்சியுள்ளவர்களாக, எங்கள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுபவர்களாக கற்றபயிற்சியை மற்றவர்களுக்கும் புகட்டக் கூடியவர்களாக உங்களை நீங்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்றார்.

முன்னதாக நிகழ்வின் முதன்நிகழ்வாக நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஒளிர்வன்னி ஆடைத்தொழிலக வளாகத்தில் பொதுச்சுடரினை சமுதாய முன்னேற்ற நிலையப் பணிப்பாளர் ஐங்கரன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கினை கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் எஸ். கணேசபிள்ளை, தமிழீழ மகளிர் அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் பரிதி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து பெண்கள் வேலைத்திட்டப் பகுதி நிர்வாக அலுவலர் ஜான்சி கிரேசியா தலைமையில் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன். அரசியல் துறை மகளிர் பிரிவு நிர்வாகப் பொறுப்பாளர் பரிதி, போராளி, மாவீரர் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், சமுதாய முன்னேற்ற நிலையப் பணிப்பாளர் ஐங்கரன், சமுதாய முன்னேற்ற நிலைய உதவிப் பணிப்பாளர் விக்கி, கலைபண்பாட்டுக்கழகத்தைச் சேர்ந்த புதுவை.அன்பன் மற்றும் பலர் கலந்துகொண்டு பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள், தொழில் உபகரணங்கள், தொழில்நிலைய கட்டடத்திற்கான நிதி ஆகியவற்றினை வழங்கிக்கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மின்சார உபகரணங்களை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுப்பு

(வவுனியா)

வவுனியாவில் இருந்து புளியங்குளம்வரை மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்கு தேவையான மின்சார உபகரணங்களை எடுத்துச் செல்ல சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இலங்கை மின்சார சபையின் மூலம் வவுனியாவில் இருந்து புளியங்குளம் வரை மின்சாரம் வழங்கவென 14 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு உபகரணங்களை ஓமந்தை இராணுவ சோதனை நிலையம் ஊடாக எடுத்துச்செல்ல படையினர் அனுமதி மறுத்துள்ளனர். அதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரிய போதும் பாதுகாப்பு அமைச்சும் அனுமதி வழங்க மறுத்ததால் இவ்உபகரணங்களை எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (10)

# தம்பலகமம் வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் வழங்கல்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகமம் பிரதேச வைத்தியசாலைக்கு ஒருதொகுதி மருந்துப்பொருட்களை கடந்த செவ்வாயன்று மாலை மூன்று மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது.

தம்பலகமப் பிரதேச இணைப்பாளர் சு.நல்லசிவம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பிரதம விருந்தினராக தம்பலகமப் பிரதேச செயலாளர் யு.சிங்கராஜா கலந்துகொண்டார். இந்நிகழ்வில் தம்பலகமம் பிரதேச செயலாளர் யு.சிங்கராஜா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களையும், சு.நல்லசிவம் மருந்துப் பொருட்களின் விபரத்தினையும் அப்பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் விக்னேஸ்வரனிடம் வழங்கினார். இந்நிகழ்வில் வைத்தியசாலைப் பணியாளர்கள், பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அவசர கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லை வேலையற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை9.30 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதென பட்டதாரி பயிலுனர் சங்கம் அறிவித்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆசிரியர் பயிலுனர்களும் ஏனைய அனைத்து பயிலுனர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (20)

# பல்கலை வெட்டுப் புள்ளி டிசம்பரில் வெளியாகும்

(வவுனியா செய்தியாளர்)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி எதிர்வரும் டிசம்பர் மாதம் வெளியாகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் அறிவித்துள்ளார்.

அண்மையில் வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 1,16,506பேர் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுள்ளனர். இவர்களில் 2,910பேர் மூன்று பாடங்களிலும் A சித்தியைப் பெற்றுள்ளனர். பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் ஒக்ரோபர் 15ஆம் திகதி முதல் நவம்பர் வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (10)

# அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் பிற்போடல்

(அலுவலகசெய்தியாளர்)

எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெற மாட்டாது.இக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். தயவு செய்து சகல திணைக்களத் தலைவர்களும்,துறைசார் பொறுப்பாளர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (கு)

## -வவுனியா வடக்கு கல்வி வலயத்தில்-

# உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் 26 பாடசாலைகள்!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள 89 பாடசாலைகளில் 26 பாடசாலைகள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகத் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையில் இயங்கிவருவதாக வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி. தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும்கருத்துத் தெரிவிக்கையில்; வவுனியா மாவட்டத்தின் 65 வீதமான நிலப்பரப்பைக் கொண்டுள்ள வவுனியா வடக்கு கல்வி வலயமானது, வவுனியா, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள பாடசாலைகளை உள்ளடக்கியதாகவுள்ளது. இவ்வலயத்தின் ஓமந்தைக் கோட்டத்தில் 47 பாடசாலைகளும், நெடுங்கேணி கோட்டத்தில் 42 பாடசாலைகளும் உள்ளன.

இவ்89 பாடசாலைகளிலும் 63 பாடசாலைகள் சொந்த இடத்தில் இயங்குகின்றன. ஏனைய 26 பாடசாலைகளும் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையில் இணைப்புப் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன. இவ் 26 பாடசாலைகளையும் சொந்த இடங்களில் மீள ஆரம்பிக்க முடியாமல் இருப்பதற்கு பிரதான காரணம் அவை உயர்பாதுகாப்பு வலயங்களாக இருப்பதே ஆகும் என்றார். (10)

# இருபாடசாலைகளுக்கு தகவல் தொடர்பாடல் வசதி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இரு பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

புளியங்குளம் இந்துக்கல்லூரி, ஓமந்தை மத்தியகல்லூரி ஆகிய இரு பாடசாலைகளிலும் அமைக்கப்பட்டுள்ள இத்தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப நிலையங்கள் ஒவ்வொன்றும் தலா இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் ஒவ்வொன்றிலும் பத்து கணினிகள் உள்ளதாகவும் இதற்கான நிதி உதவியை உலக வங்கி வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 2,50,386 பேர் வாக்களிக்கத் தகுதி

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 2,50, 386 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 14, 884 பேரும், மன்னார் மாவட்டத்தில் 78,906 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 66,596 பேருமாக 250,386 பேர் இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் சனாதிபதித் தேர்தலுக்கு வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 222 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் 91 வாக்களிப்பு நிலையங்களும், மன்னார் மாவட்டத்தில் 67 வாக்களிப்பு நிலையங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 64 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. இவ் வாக்களிப்பு நிலையங்களில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான 64 வாக்களிப்பு நிலையங்களும் ஓமந்தையில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களாகவும், மன்னார் மாவட்டத்திற்காக 67 வாக்களிப்பு நிலையங்களில் 15 வாக்களிப்பு நிலையங்கள், உயிலங்குளம் இராணுவ சோதனை நிலையம், மடுவீதிச் சந்தி ஆகிய இடங்களில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களாகவும் அமைக்கப்படவுள்ளன. (10)

## முக்கிய கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலய பாடசாலை அதிபர்களுடனான முக்கிய கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு வலயக்கல்விப் பணிமனையில் நடைபெறும். அதிபர்கள் தவறாது சமுகம் தருமாறு முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம் அறியத்தந்துள்ளார்.

# வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் மாபெரும் கல்வி மாநாடு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் "இன்றைய கல்வி நிலவரம் பற்றிய கருத்தாடலும், கல்வி விருத்திக்கான மூலோபாயங்களைத் தேடலும்" என்ற தொனிப்பொருளில் மாபெரும் கல்வி மாநாடு எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெறவுள்ள இக் கல்வி மாநாட்டை சம்பிரதாய பூர்வமாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் ஆரம்பித்துவைப்பார். இக்கல்வி மாநாட்டில் மத்திய கல்வி அமைச்சின் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம், வவுனியா மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஜனாப் அகமட்ஹரன், வவுனியா தெற்கு, மடு, துணுக்காய், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய வலயங்களின் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள், வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்கள், வவுனியா வடக்கு கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதிஅதிபர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத் திச்சங்க செயலாளர்கள், பழைய மாணவர்சங்க செயலாளர்கள் உட்பட250 இற்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

# தமிழீழ அரசை சர்வதேசம் அங்கீகரிக்க

# பொங்குதமிழ் ஏற்பாடுகள் யாழ். இல் தீவிரம்

## - எழுச்சிக் குழுக்கள் பலவும் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

**பாரம்பரிய தமிழர் வாழ்விடங்களான இலங்கையில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நடைமுறையிலுள்ள தமிழீழ அரசை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டுமென்ற கருப்பொருளை அடிநாதமாகக் கொண்ட பொங்குதமிழ் பிரகடனத்தை மாபெரும் மக்கள் எழுச்சி நிகழ்வில் நிறைவேற்ற வலி மேற்கிலுள்ள மக்கள் தயாராகி வருகின்றனர்.**

கடந்த மாத இறுதியில் மானிப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் உள்ளிட்ட வலிமேற்குப் பிரதேசங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பின்னர் பொது அமைப்புக்கள் எழுச்சிக் குழுக்களை அமைத்துள்ளன.

வலி. தென்மேற்குக் கடற்றொழிலாளர்களின் சமாசங்களின் சம்மேளனம், பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கம், மற்றும் பிரதேச செயலகம் (சண்டிலிப்பாய்) ஆகிய நிறுவனங்களின் அங்கத்தவர்களும், ஊழியர்களும் பொங்குதமிழ் எழுச்சிக் குழுக்களை அமைத்துள்ளனர்.

காரைநகரில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள், வர்த்தகர்கள், மாதர் சங்கம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியனவும், சங்கானை பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பொங்குதமிழ் எழுச்சிக் குழுக்களை நிறுவியுள்ளனர் என பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

# "ஆகவே" சஞ்சிகை இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலாச்சாரக்கூட்டுறவு பெருமன்றத்தினால் வெளியிடப்படும் "ஆகவே" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று காலை 9.45 மணிக்கு கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்க கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

# போதனா வைத்தியசாலைக்கு 4 மருத்துவர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றுவதற்காக நான்கு புதிய வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் மருத்துவ பயிற்சி நெறியினை முடித்துக்கொண்ட பதினாறு பேர் மருத்துவமனை உள்ளக பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டு இருப்பதாகவும் இவர்கள் தமது பணியினைஆற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ். குடாநாட்டில் உள்ள அரச மருத்துவமனைகளில் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை தொடர்கின்றமை தெரிந்ததே. (28)

# யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாரம் இரு பொங்குதமிழ் ஏற்பாட்டுக் கூட்டங்கள்

யாழ்.பல்கலைக்கழகத்தில் இவ்வாரம் இரண்டு பொங்குதமிழ் ஏற்பாட்டுக் கூட்டங்கள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை பி.ப மூன்று மணிக்குப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் ஏற்பாட்டுக் கூட்டத்தில் யாழ். குடாநாட்டிலுள்ள சகல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். தொழிற் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட சகல செயற்குழு உறுப்பினர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கூட்ட ஏற்பாட்டாளராகிய பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா வேண்டியுள்ளார்.

மறுநாள் வியாழக்கிழமை பி.ப. மூன்று மணிக்கு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில் பல்கலைக்கழக பீடாதிபதிகள், நூலகர், பதிவாளர், நிதியாளர், வேலைப் பொறியியலாளர், துறைத்தலைவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள், உதவி நூலகர்கள், போதனைசாரா ஊழியர்கள் என முழுப் பல்கலைக்கழக ஆளணியும் மாபெரும் பொங்குதமிழ் எழுச்சிக்கான பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாடுகள் பற்றி கலந்துரையாடவுள்ளனர்.

இக்கூட்டத்தில் சகல பல்கலைக் கழக ஆசிரியர்களும், ஊழியர்களும் கலந்து கொள்ளும் பொருட்டு அத்தருணம் அவர்கள் கடமையிலிருந்து விடுவிக்கப்படுவார்களெனப் பல்கலைக் கழக பதில்பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# கோணாவளை கிராமத்திற்கு சாலை அமைக்கக் கோரல்

(தென்மராட்சி)

சரசாலை வடக்குப் பகுதியில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமமான கோணாவளை கிராமத்திற்கு சாலை அமைப்பது தொடர்பாக நீண்ட காலமாக நிலவி வரும் சமூக சிக்கலை முற்றாய் களைந்து தமமுடைய கிராமத்திற்கு சாலை ஒன்றை அமைத்து தரும்படி இக்கிராம மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜிடம் மீண்டும் முறைப்பாடு ஒன்றை செய்திருப்பதாக தெரியவருகிறது.

இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்களை உள்ளடக்கிய இக்கிராமத்திற்கு, கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சாலை வசதிகளோ, மின்சார வசதிகளோ, மற்றும் அடிப்படை வசதிகளோ, இன்றி வயல் வெளிகளுக்கு அப்பால் காட்சியளிக்கும் இக்கிராமத்திற்கு வயல்வெளியூடாக பாதை அமைத்து கொடுக்க யாழ். அரசாங்க அதிபர் மூலம் கடந்த ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் முயற்சி எடுத்தார்.ஆயினும் பல வயல் உரிமையாளர்கள் தமது வயலின் ஊடாக பாதை அமைக்க உடன்பட்டபோதும் ஒரேஒரு வயல் உரிமையாளரே இதற்கு எதிராக பொலிசார் மற்றும் அரச உயர் அதிகாரிகளுக்கு பிரச்சினையை ஏற்படுத்தியதன் மூலம் இக்கிராமத்திற்கு பாதை அமைக்கும் முயற்சிகைவிடப் பட்டதாகவும் தெரியவருகிறது. (28)

# குடிநீருக்காக அவதி

(தென்மராட்சி)

புங்குடுதீவில் தொடர்ந்து நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டால் அங்குள்ள ஆயிரக்கணக்கான கால்நடைகள் குடிக்க நீர் இன்றி நீர் நிலைகளைத் தேடி பல கிலோமீற்றர்கள் அலைந்து திரிவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குளங்கள் பல வற்றிக்கிடப்பதாலும் அகோரமாக அடிக்கும் வெய்யிலினால்,நீர்நிலைகள் பல வற்றிக்கிடப்பதால் கால்நடைகள் நீர் தேடி பரிதாபமாக அலைவதாகவும் இது குறித்து இப்பகுதி மக்கள் சில தனியார் உதவும் நிறுவனங்கள் மூலம் சில குளங்களை ஆழப்படுத்தியுள்ளனர். மேலதிக உதவிகளை செய்யும்படி அவர்கள் கோரியுள்ளனர். (28)

# மந்திகையில் ஈ.பி.டி.பி யினரைக் காக்க படையினர் நாளாந்தம் தேடுதல்!

பருத்தித்துறை-மந்திகையில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி முகாமை அண்டிய பிரதேசங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் தேடுதல் வேட்டையை நாளாந்தம் அதிகரித்து வருகின்றனர். இப்பகுதிகளில் உள்ள வீடுகளில் இரவு,பகல் என இராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்துவதுடன் பொதுமக்களையும் பீதிக்குள்ளாக்கி வருகின்றனர். இராணுவத்தினுடைய இத்தகைய செயற் பாட்டினால் அந்தப் பகுதி மக்கள் பெரும் குழப்பம் அடைந்துள்ளனர். (கீ)

# நிரந்தர வீடுகள் அமைக்கும் பணியை துரிதப்படுத்த மக்கள் வேண்டுகோள்

(தென்மராட்சி)

நிரந்தர வீடுகள் அமைக்கும் பணியைத் துரிதப்படுத்தி தாங்கள் எதிர்கொள்ளவுள்ள நெருக்கடிகளைத் தீர்க்குமாறு சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தித்துறைப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை கடற்கரையோர கிராம மக்கள் வீடுகளை இழந்து கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாகியும் அடிப்படை வசதிகள் அற்று தற்காலிக வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். சுனாமியினால் வீடுகளை இழந்த மக்களுக்கான நிரந்தர வீடுகள் கட்டும் பணியோ மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதாகவும், தற்காலிக வீடுகளோ, வரும் மழைகாலத்திற்குத் தாக்குப்பிடிக்காது என்பதால் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணியினை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகள் துரிதப்படுத்தும்படி சுனாமியால் பாதிக்கப்பட்டு தற்காலிக வீடுகளில் தங்கியுள்ள மக்கள் சம்பந்தப்பட்டோரை கோரியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# பட்டதாரி பயிலுனர்களை அரசசேவையில் நிரந்தரமாக்கும் திட்டத்தில் முல்லை.பட்டதாரி ஆசிரிய பயிலுனர்கள் புறக்கணிப்பு!

## –முல்லை. மாவட்ட பட்டதாரிகள் சங்கம் கடும் ஆட்சேபம்

அரசசேவையில் பட்டதாரி பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தில் முல்லை மாவட்ட பட்டதாரி ஆசிரியப் பயிலுநர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமையை ஆட்சேபித்து முல்லை.மாவட்ட பட்டதாரிகள் சங்கம் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதன்விபரம் வருமாறு, வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட "வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையிலுள்ள வெற்றிடங்களுக்கு ஆட் சேர்க்கும் திட்டத்தின்" கீழ் இரண்டாவது பிரிவில் எமது மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு மூன்று மாத நிலையப் பயிற்சியும் அதனைத் தொடர்ந்து பல்வேறுபட்ட திணைக்களங்களில் செய்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி பட்டதாரிப் பயிலுனர்களில் கணிசமானவர்கள் ஆசிரியர்களாகவும் ஏனையோர் பல்வேறு திணைக்களங்களிலும் பயிற்சி பெற்று வந்தனர். இவர்களில் ஏனைய திணைக்களங்களில் பயிற்சி பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய அரசின் கீழ் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் தற்போது வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நடாத்தப்பட்ட இரண்டு போட்டிப் பரீட்சைகளின் அடிப்படையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரந்தர நியமனத்தில் ஆசிரியர் நியமனமும் ஏனைய திணைக்களங்களுக்கான நியமனங்களும் உள்ளடங்கும். வழங்கப்பட்ட ஆசிரியர் நியமன விபரத்தின்படி முல்லை.வலயத்துக்கு 202 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு நியமனம் பெற்றவர்களுள் ஏற்கனவே பயிற்சியிலுள்ள 100 இற்கு மேற்பட்ட பயிலுனர் ஆசிரியர்களிலிருந்து 40-50 இற்குட்பட்டவர்களே உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதுபோன்ற நிலைதான் எமது மாவட்டத்தின் அடுத்த கல்வி வலயமான துணுக்காய் வலயத்திற்கும் ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்திருந்த எமது மாவட்ட பட்டதாரி பயிலுனர்கள் தங்களின் இந் நியமனம் கண்டு மிகுந்த மனவேதனையும் விரக்தியும் அடைந்துள்ளனர். தங்களின் நியமனத்தில் குறைபாடாக பின்வருவனவற்றை குறிப்பிட விரும்புகின்றோம்.

01. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து அமைச்சு கேள்விச்சபைத் தலைவரினால் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட வேலைக்கு முடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாக கிருஷ்ணன் கோவில் வீதி, கிளிநொச்சியில் அமையப் பெற்ற மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்திபெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை கிருஷ்ணன் கோவில் வீதி கிளிநொச்சியில் அமையப்பெற்ற மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 03 ஆம்திகதி பி.ப.03.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப்பத்திரங்களை (இரு பிரதிகளில்) பெற்றுக்கொள்ளலாம்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப்புத்தகத்தினைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

04. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும்விநியோகிக்கப்படும் அத்துடன் தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில்காட்டப்பட்ட முகவரியில்பெற்றுக்கொள்ளலாம்.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல்வேண்டும். அத்துடன் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்வித்தொகைக்கான கேள்விப்பிணை செயலாளர் புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூகநலத்துறை,கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயரில் எடுக்கப்பட்டு கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர் கேள்விச்சபை, புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை, கட்டடங்கள் ,மகளிர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி பி.ப 03.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

06. வேறு விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| வேலை விபரம் | கேள்விப் பிணை ரூபா | மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா. | இக்ராட் பதிவுப் பத்திரம். | நிறைவேற்று எந்திரியின் முகவரி |
|---|---|---|---|---|
| பிரதிச் சுகாதார சேவைகள் பணிப் பாளர் காரியாலய மிகுதி வேலைகள் கட்டம் III | 196,000 | 1,000 | M-5 | நிறைவேற்று எந்திரி அலுவலகம். மாகாண கட்டடங்கள் திணைக்களம். கிருஷ்ணன் கோவில் வீதி. கிளிநொச்சி தொ. இல: –021–2285758 |

புனர்வாழ்வு ,புனரமைப்பு, சமூக நலத்துறை, கட்டடங்கள்,
மகளிர் விவகார அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை. திகதி 07.09.2005 (சி-12709)

திரு.வி.செ.சுவாமிநாதன்
தலைவர்,
அமைச்சு கேள்விச் சபை.

# குண்டுப்புரளி தொடர்பாக ஊழியர்களிடம் விசாரணை

சிறிலங்கா கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட குண்டுப் புரளி தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விமான நிலைய ஊழியர்களிடம் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

விமான நிலையத்தின் உள்ளே இருந்தே இந்த அனாமதேய தொலைபேசி அழைப்பு வந்துள்ளதை குற்றப் புலனாய்வு பொலிசார் கண்டுபிடித்தனர்.

இதையடுத்து விமான நிலைய ஊழியர்கள் அனைவரிடமும் விசாரணை நடத்தி வாக்குமூலங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரியிடம் நடத்திய விசாரணையில் தமக்கு அனாமதேய தொலைபேசி அழைப்பு வந்ததால் அவசரகால நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினோம் என்றார்.

புரளிக்குள்ளான சவுதி அரேபிய விமானம் கொழும்பு விமான நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்த விமானம் மீண்டும் மீண்டும் சோதனையிடப்பட்டு வருகிறது. இருப்பினும் இதர விமான சேவைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இச் சம்பவம் குறித்து சிறிலங்கா விமானப் படை அதிகாரி ஏர் மார்ஷல் டொனால்ட் பெரேரா கூறுகையில்; அனைத்து பயணிகளின் உடமைகளும் முழுமையாக பரிசோதிக்கப்பட்டு மாற்று விமானம் மூலம் பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர் என்றார்.

கடந்த வியாழக்கிழமை குண்டுப் புரளி கிளம்பியதால் விமானத்திலிருந்து அவசரமாக பயணிகள் இறங்கிய போது ஒரு பெண் இறந்தார். அவரது சடலம் நீர் கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் 91 பயணிகள் படுகாயமடைந்தனர்.



## CHANDRAN INTERNATIONAL SCHOOL KILINOCHCHI

**SCHOOL ADMISSION FOR 2006**

Applications are now accepted in our school for admission of students to 'Play Group'. Children should have completed 3 years. Applications should be made on specific forms available at the school.

(6691) ***Principal***





## சிறுவர்களின் மனநிலையை மேம்படுத்த முல்லை. வண்ணாங்குளத்தில் விளையாட்டு நிகழ்வு

இளையோர் செயற்பாட்டு நிறுவன அனுசரணை யுடன் முல்லைத்தீவு தற்காலிக குடியிருப்பில் வாழும் சிறார்களின் மனநிலையை மேம்படுத்தும் நோக்குடன் வண் ணாங்குளம் ஏ-முகாம் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை மூன்று மணிக்கு முகாம் தலைவர் ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தேசியக்கொடியினை முல்லை மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் ரங்கன் ஏற்ற, விளை யாட்டு நிகழ்வுகளை முல்லை மாவட்ட விளையாட்டு பயிற்சியாளர் முகுந்தன், இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தை சேர்ந்த கணேஷ் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து இளையோர்களுக்குரிய விளை யாட்டுக்கான உதைபந்தாட்டம் தாச்சி, அஞ்சலோட்டம் போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (20)

## நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்து போட்டி

கிளிமாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நியூஸ்ரார் வி.க.நடாத் தும் மேஜர் துளசிஞாபகார்த்த மென்பந் தாட்டப் போட்டி நேற்றைய தினம் ஆரம்ப மாகி சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. 22 கழகங்கள் பங்குபற்றும் இப்போட்டியின் முதலாவது போட்டியில் சோலை ஏ.அணியும், சுடரொளி அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சுடரொளி 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்காடிய சோலை அணி 10.3 ஓவர்களில் இரண்டு விக்கெட்டினை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்று எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் என்.ஈ.சி. 'பி' அணி ஸ்ரார் அணிகள் மோதின. முதலில் துடுப் பெடுத்தாடி.என்.ஈ.சி. பி. 15 ஓவர்களில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 116 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்காடிய ஸ்ரார் அணி 15 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. இப் போட்டியில் 18 ஓட்டங்களால் என்.ஈ.சி பி அணி வெற்றிபெற்றது.

மூன்றாவது போட்டியில் ஜெலிஸ்ரார்- மாலதி அணிகள் மோதின. முதலில் துடுப் பெடுத்தாடிய ஜெலிஸ்ரார் 13 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாலதி அணி 10.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. ஜெலிஸ்ரார் அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. நான்காவது போட்டியில் உழவர் ஒன்றியம்-பாரதி "B" அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய பாரதி அணி 15 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைபெற்றது. பதிலுக்கு ஆடிய உழவர் ஒன்றியம் 14.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. 15 ஓட்டங்களால் பாரதி பி. அணி வெற்றி பெற்றது. இப் போட்டிகளுக்கு ம.கிஸ்ணரூபன், அ.குகன் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர்.

## ஓவல்டெஸ்ட் கிரிக்கெட்போட்டி அவுஸ்.வலுவான அடித்தளம் இட்டது







ஓவல் டெஸ்டில் அவுஸ்திரேலிய- இங்கிலாந்து அணி எதிராக வலுவான அடித்தளம் அமைத்துள்ளது சைமன் ஜோன்ஸ் (காயம்) இல்லாத இங்கிலாந்து பந்து வீச்சில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது.

எனினும் சீரற்ற கால நிலையால் அவுஸ். அணி தனது முதல் இனிங்சிற்காக 52 ஓவர்கள் ஆடி ஒரு விக்கெட்டை இழந்து ¶85 ஓட்டங்களையே பெறமுடிந்தது. லாங்கர் 105 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ஹெய்டன் 70 ஓட்டம் பெற்றிருந்தார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட பாரம்பரியமிக்க ஆஷஸ் தொடரில் பங்கேற்கிறது. இங்கிலாந்து அணி 2-1 என்ற முன்னிலையில் இருக்க முக்கியமான ஐந்தாவது டெஸ்ட் லண்டன் ஓவல் மைதானத்தில் நடக்கிறது. இப்போட்டியை சமன் செய்தாலே இங்கிலாந்து அணி 1986-87 இற்கு பின் கோப்பையை கைப்பற்றலாம். தொடர்ந்து எட்டு முறை ஆஷஸ் கோப்பையை தக்கவைத்துள்ள அவுஸ்திரேலியா வென்றாகவேண்டிய கட்டாயத்தில் இருந்துவருகிறது. முதல் நாள்வோர்ன் ஐந்து விக்கெட் வீழ்த்தினார் ஸ்ரோஸ் சதம் அடிக்க இங்கிலாந்து அணி ஆட்டநேர முடிவில் ஏழு விக்கெட் இழப்புக்கு 319 ஓட்டம் எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. பின்வரிசை வீரர்கள் ஆட ஓட்டவேகம் விரைவாக உயர்ந்தது. கைல்ஸ் 32 ஓட்டங்களுக்கு வோர்னின் சுழற்பந்து வீச்சில் வெளியேறினார். இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 373 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்து, ஹார்மிசன் (20) ஆட்டமிழக்காது இருந்தார்.

அவுஸ்திரேலியத் தரப்பில் வோர்ன் ஆறு, மொக்ராத் இரண்டு விக்கெட் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு லாங்கர் அதிரடியாக ஆட மறுமுனையில் ஹைடன் கவனமாக ஆடினார். நேற்றுமுன்தினம் ஆட்டம் தேநீர் இடைவேளைக்கு பின் போதிய வெளிச்சம் இல்லாத தால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 112 ஓட்டம் எடுத்திருந்தது.

லாங்கர் 75 (8 பவுண்டரி,2சிக்ஸ்சர்),ஹைடன் 32 (4 பவுண்டரி) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.


ஆறு விக்கெட்டை கைப்பற்றிய அவுஸ் திரேலியாவின் சுழல்மன்னன்வோர்ன், இத்தொடரில் தனது விக்கெட் எண்ணிக்கையை 34 ஆக உயர்த் தினார். இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் ஒரே தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய தனது சாத னையை சமன் செய்தார். முன்னதாக இவர் 1993 இல் அங்கு நடந்த ஆஷஸ் தொடரில் 34 விக்கெட் வீழ்த்தியிருந்தார். டெஸ்டில் இது வரை 617 விக்கெட் வீழ்த்தியுள்ளார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## இங்கிலாந்து கிரிக்கெட் புரட்சிகரமாகிவிட்டது




இங்கிலாந்து-அவுஸ்திரேலியா பெண்கள் அணி பங்கு பற்றிய இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் போட்டித்தொடரை ஒன்றுக்குப் பூஜ்ஜியம் என்ற கணக்கில் இங்கிலாந்து பெண்கள் அணி கைப்பற் றியது.

இதற்கான பரிசளிப்பு விழா நேற்று முன் தினம் இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகள் பங்கு பற்றும் ஐந்தாவதும் இறுதியுமான ஆஷஸ் கிண்ணப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளையின் போது நடைபெற்றது. இங்கிலாந்து பெண்கள் அணித் தலைவி கிளேயர் கொனி இங்கிலாந்து கிரிக் கெட்சபைத் தலைவர் டேவிட் மோர்கனிட மிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார். கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட கொனி தெரிவிக்கும்போது இங்கிலாந்து கிரிக்கெட் தற்போது புரட்சிகரமாகிவிட்டது. என்றும் கடந்த உலகக்கிண்ணப்போட்டியில் அரை யிறுதியில் அவுஸ்திரேலியா வென்றதால் தமது மண்ணில் அதனைவெற்றிகொள்வதில் சந்தேகமிருந்த தாகவும் தெரிவித்தார்.



ஹங்கேரி, புடாபெஸ்ட் நகரில் நடந்த உலக கோப்பை தகுதி கால்பந்து போட்டி யில், ஸ்வீடன் வீரர் இப்ராகிமோவிக்கை முன்னேற விடாமல் தடுக்கிறார் ஹங்கேரி வீரர் கேபர் கிப்ஸ். இந்தப் போட்டியில் ஸ்வீடன் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.




## உலக தடகள நீளம்தாண்டும் போட்டி அஞ்சு ஜோர்ஜ் வெள்ளிப்பதக்கம் வென்றார்



உலக தடகளப்போட்டியின் நீளம் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கம் வென்று சாதித்தார் இந்தியவீராங்கனை அஞ்சுபாபி ஜோர்ஜ். உலக தடகள சம் பியன்ஷிப் தொடர்மொனாக் கோவில் நேற்று முன்தினம் தொடங்கியது. பெண்களுக்கான நீளம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் முன்னணி வீராங்கனை அஞ்சு பாபிஜோர்ஜ் பங்கேற்றார். சமீபத்தில் தென் கொரியாவில் நடந்த ஆசிய தடகளப்போட்டியில் தங்கம் வென்ற இவர் தொடக்கத்தில் தடுமாறினார். முதல் இரண்டு வாய்ப்பில் தவறாக தாண்டிய அவர் மூன்றாவது வாய்ப்பில் சிறப்பாக செயற்பட்டார் இந்த தடவை 6.75 மீற்றர் தாண்டி வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார். ரஷ்யாவின் டாட்யானா கோட்வாம 6.83 மீற்றர் தாண்டி தங்கம் வென்றார் அமெரிக்காவின் கிரேஸ் அப்ஷா (6.67.மீ) வெண்கலம் பெற்றார். உலக தர வரிசையில் ஏழாவது இடத்தில் இருக்கும் அஞ்சு இந்தியாவுக்கு தொடர்ந்து பெருமை சேர்த்து வருகிறார். 2003இல் பாரிஸ் உலக தடகளத்தில் வெண்கலம் வென்றார். இவர் இப்போது வெள்ளிப்பதக்கம் வென்று சாதித்துள்ளார்.

## பார்வையற்றவர் உலக சாதனை

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பார்வையற்ற ஹெயின் வேக்னர் ...மான ஓடு தளத்தில் மணிக்கு 269 கிலோ மீற்றர் தூரம் கார் ஓட்டி ...தனை படைத்துள்ளார். வியாழக்கிழமை இவர் இந்த சாதனையைப் படைத்தார்.

இதற்கு முன்னதாக மணிக்கு 236 கிலோ மீற்றர் ஓட்டியதுதான் சாதனையாகும். வட மேற்கு தென்னாபிரிக்காவில் இச் சாதனையை படைத்துள்ளார் வேக்னர்.

## உலக கிண்ண கால்பந்து போட்டி மெக்சிக்கோ அணி தகுதி பெற்றது

உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு தொடர்ந்து நான்காவது முறையாக மெக்சிக்கோ தகுதி பெற்றுள்ளது.

2006 இல் ஜேர்மனியில் உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடக்கிறது. வடக்கு, மத்திய அமெரிக்க, கரிபியன பகுதிகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடந்து வருகின்றன. மெக்சிக்கோவின் அஸ்டகா அரங்கில் நடந்த போட்டியில் மெக்சிக்கோ, பனாமா அணிகள் மோதின. அபாரமாக ஆடிய மெக்சிக்கோ 5-0 என்ற கோல் கணக்கில் எளிதான வெற்றி பெற்றது. மெக்சிக்கோ சார்பில் லூயிஸ் பெரேஸ், ரபேல் மார்குயீஸ், ஜேரட் போர்கெட்டி, பிரான்சிஸ் போன்செகா, கேட்டன் பாவேல் பர்டோ தலா ஒரு கோல் அடித்தனர். அமெரிக்க, கௌதமாலா இடையிலான போட்டி சமனில் (0-0) முடிந்தது. கோஸ்டாரிக்கா அணி டிரினிடாட், டுபாக்கோ அணியை 2-0 என்ற கணக்கில் வென்றது.

ஒன்பது இதுவரை போட்டியை நடத்தும் ஜேர்மனி தவிர்த்து உலக சம்பியன் பிரேசில், ஆர்ஜென்டீனா, உக்ரைன், அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, ஈரான், சவுதிஅரேபியா, மெக்சிகோ உள்ளிட்ட ஒன்பது அணிகள் உலகக் கோப்பை போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.




நியூயோர்க்கில் நடந்த அமெரிக்க... ஓபன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் இறுதிப்போட்டியில், மகேஷ் பூபதி (இந்தியா) - டேனியலா ஹன்டுசோவா (ஸ்லோவாக்கியா) ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. வெற்றி அனுபவங்களை வியப்புடன் விளக்குகிறார் ஹன்டுசோவா.

## சிந்தனைக்கு



மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே- போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-09-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மதிப்பளிக்காத மகிந்த....!

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் - ஜே.வி.பி.இடையிலான உடன்பாடு பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்ட தொன்றாயினும், சிலருக்கு அது ஏமாற்றத்தையும் அளித்துள்ளது. குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஏமாற்றம் அளித்துள்ளது என்பதை அதன் பின்னரான சம்பவங்கள் நிரூபணம் செய்வதாகவுள்ளன.

சிங்கள அரசியல்வாதிகள் பொதுவாகவே ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளும் வழி வகையையே சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டார். எனினும் சனாதிபதி சந்திரிகாவிற்கு இது இணக்கப்பாடான தொன்றாக இல்லை. ஜே.வி.பி. மீது அவர் கொண்டுள்ள சீற்றமே இதற்குக் காரணமாகும்.

சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியினர் மீதும், ஜே.வி.பியினர் சனாதிபதி சந்திரிகா மீதும் கொண்டுள்ள அதிருப்தி, வெறுப்பு அண்மைக்காலமாக வெளிப்பட்ட தொன்றாகவே இருந்தது. சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்க சனாதிபதி சந்திரிகா உடன்பட்டபோதே ஜே.வி.பியுடன் தேர்தல் கூட்டிற்குச் செல்லக்கூடாது என்ற நிபந்தனை விதித்ததாகத் தகவல்கள் வெளியாயிருந்தன.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ இதனைப் பொருட்படுத்தவில்லை, ஒரு புறத்தில் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற ஜே.வி.பி யின் கூட்டு அவசியமானதென்ற முடிவிற்கு வந்த அவர், மறுபுறத்தில் சனாதிபதி சந்திரிகாவின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்கவேண்டிய அவசியமில்லை என்ற முடிவிற்கும் வந்திருந்தார். அதாவது பதவிக்காலத்தின் இறுதிநாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் சந்திரிகாவின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதில்லை என மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருத்தல் வேண்டும்.

இது ஒருவகையில் பதவியை பறிக்க முற்படும் ஒருவருக்கும் பதவி துறக்கப்போகும் ஒருவருக்குமிடையிலான முரண்பாடு எனக்கூடக் கூறலாம். இதனை வெளிப்படுத்துமாப்போல் ஜே.வி.பி யுடனான உடன்பாட்டின் பின்னர் கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ இத்தகைய கூட்டணிகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குப் புதிதல்ல எனத் தெரிவித்திருந்ததோடு கடந்தகால கூட்டுப்பற்றியும் பட்டியல் ஒன்றை இட்டிருந்தார்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவின் இக்கூற்றுக்கள் எந்தளவிற்குச் சரியானது என்பது விமர்சனத்திற்குரியதே. ஏனெனில் கடந்தகால சுதந்திரக்கட்சித் தலைவர்கள் தேர்தல் உடன்பாடுகள் மேற்கொண்டிருப்பினும் அவை சிறிலங்காசுதந்திரக்கட்சிக்கும் ஏனைய கட்சிக்குமிடையிலானதொன்றாகவே இருந்துள்ளது. வேறுவிதமாகக் கூறின் உடன்பாடு செய்தவர்கள் சுதந்திரக் கட்சியின் தலைவர்களாக இருந்துகொண்டே உடன்பாடு செய்தனர்.

ஆனால், தற்போதைய உடன்பாடு மகிந்த ராஜபக்ஷவிற்கும், ஜே.வி.பி இற்கும் இடையிலானதாகும். அதாவது ஜே.வி.பி.- சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் உடன்பாடு எதையும் செய்யவில்லை. ஜே.வி.பி யினரும் சரி, சுதந்திரக்கட்சியினரும் சரி இதனையே கூறியும் வருகின்றனர். கட்சியின் செயலாளர் கையொப்பமிடாமலும் கட்சித் தலைவரின் இணக்கப்பாடு மற்றும் மத்திய குழுவின் இணக்கப்பாடின்றியும் மேற்கொள்ளப்படும் உடன்பாட்டை அவ்வாறு கூறுவதே சரியுமாகும் ஆயினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரொருவர் எவ்வாறு மற்றொரு கட்சியுடன் தனிப்பட்ட உடன்பாடொன்றைச் செய்துகொள்ள முடியும்? உடன்பாட்டை கட்சி ஏற்றுக்கொள்ளாதுவிட்டால் கட்சியின் வேட்பாளர் அதற்குக் கட்டுப்பட்டவராக இருக்கவேண்டிய அவசியமில்லையா?

மகிந்த ராஜபக்ஷவினதும், ஜே.வி.பி யினதும் நிலைப்பாடு சுதந்திரக் கட்சியினால் தம்மைக் கட்டுப்படுத்த முடியாதென்பது போன்றதாகவுள்ளது. ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்பொழுது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மகிந்த ராஜபக்ஷவின் சனாதிபதி வேட்பாளர்என்றநிலையையே கேள்விக்குஉள்ளாக்குவது போன்றுள்ளது.

சனாதிபதி சந்திரிகா இவ்விடயத்தில் தீவிர அக்கறை செலுத்துவதற்கு ஜே.வி.பி யினருடனான கூட்டு என்பதற்குமப்பால் மகிந்த ராஜபக்ஷவின் புறக்கணிப்பும் முக்கியமான காரணியாகும். ஏனெனில் மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய நடவடிக்கைகள் தனது எதிர்கால அரசியல் செயற்பாடுகளுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும், தன்னை ஓரம் தள்ளிவிடும் எனச் சந்திரிகா கருதுவதற்கும் இடமளிப்பதாய் உள்ளது.

ஆகையினால் இன்று, மகிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பி. கூட்டணி சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுமா? என்பதற்கு முன்பாக மகிந்த ராஜபக்ஷ தேர்தல் வரையும் செல்வாரா? என்பது குறித்தும் கேள்வியுள்ளது. ஏனெனில், வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும்வரை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் யார் என்பதை சனாதிபதி சந்திரிகாவால் தீர்மானம் செய்ய முடியும்.



## தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதே ஐ.தே.க.வின் தேர்தல் விஞ்ஞாபனம்

(கொழும்பு)

நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு கண்டுபொருளாதாரத்தைஉறுதிப்படுத்துவதே சனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரதான நோக்கம் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது. அரசியல் தீர்வொன்றின் ஊடாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே நாட்டின் இன்றைய தேவையென அந்தக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

யுத்தம் அல்லாத சமாதானமான சூழலிலேயே நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த பிரச்சினைக்குமுக்கியத்துவம் கொடுப்பதேநோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார் (32)

# ஜே.வி.பி.யின் கைதியாக மகிந்த ராஜபக்ஷ சிக்கிக்கொண்டார்

### - ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலர்

(கொழும்பு)

ஜே.வி.பி.யுடனான ஒப்பந்தத்தின் மூலம் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை புறம் தள்ளிவிட்டு ஜே.வி.பி.யின் கைதியாக மகிந்த ராஜபக்ஷ சிக்கிக் கொண்டார் என்று ஐக்கியதேசியக் கட்சி விமர்சனம் செய்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப்பேச்சாளரும், அதன் பிரதிப் பொதுச் செயலாளருமா ா திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளதாவது:

நாட்டின் தலைமையை ஏற்க பிரார்த்திக்கும் ஒருவர் ஒரு போதும் அடிப்படைவாதிகளின் கைதியாகக் கூடாது. அனைத்து மக்களையும் பாதுகாக்கக்கூடிய அனைவருக்கும் நன்மை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்.

ஜே.வி.பி.யும் மகிந்த ராஜபக்ஷவும் மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தமானது விவகாரத்துபெறப்பட்ட திருமணத்தை மீண்டும் பதிவு செய்வது போலானது.

ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க இன்று களனி ரஜமகாவிகாரையில் நடைபெறும் மத வழிபாட்டுடன் தனது தேர்தலுக்கான நடவடிக்கைகளை தொடங்கவுள்ளார்.

ஐக்கி தேசியக் கட்சியின் விசேட சம்மேளனக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பு நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் நடவடிக்கைகள் வேட்புமனுத் தாக்கலுக்கு முன் வேட்பு மனுத்தாக்கலுக்கு பின் என இரண்டு கட்டங்களில் நடைபெறும் என்றார்.

# தேர்தலை கண்காணிக்க வெளிநாட்டு கண்காணிப்பாளருக்கு தே.ஆணையாளர் அழைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட வருமாறு வெளிநாடுகளுக்கு தேர்தல்ஆணையாளர் தயாணந்த திஸா நாயக்க எழுத்து மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம்,ஐ.நா. தேர்தல் கண்காணிப் புக்குழு, தெற்காசிய கண்காணிப்பு வலையமைப்பு, பங்களாதேஸ் தேர்தல் ஆணையாளர் பிரிவு, இந்திய மற்றும் நேபாள தேர்தல் ஆணையாளர் பிரிவு ஆகியவற்றிக்கு இக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களின்போதும் இந்தக் கண்காணிப்புக்குழுக்கள் சிறிலங்காவுக்கு உதவி வழங்கியுள்ளன. உள்ளூர் கண்காணிப்பு நிலையங்களும் இம்முறைத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தம் ஐ.நா.விற்கு அரசு அழைப்பு விடுக்கவில்லை

### – *அமைச்சரவை பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா*

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஐக்கிய நாடுகள் அமைப்பை இணைத்துக் கொள்ளப் போவதாக வெளியான செய்திகளை சிறிலங்கா அரசாங்கம் மறுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா இதைத் தெரிவித்தார்.

நோர்வேயை வெளியேற்றி விட்டு சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தம் வகிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு எதுவித அழைப்பும் விடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

சிறுவர்களைப் படையில் சேர்த்தல், அரசியல் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்தே கவனம் செலுத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் சிறி லங்கா அரசாங்கம் கேட்டதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

# அரச நிதி நிறுவனங்கள் நெல் கொள்வனவுக்கு மறுப்பு

### - ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் திறைசேரி உட்பட அரச நிதி நிறுவனங்கள் அறுவடை செய்யப்படும் நெல்லை கொள்வனவு செய்ய உரிய செயற்றிட்டம் ஒன்றையும் ஆரம்பிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமாரநாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

இதனால் அறுவடை செய்யப்பட்ட நெல் பாவிக்க முடியாமல் போய்விடும் நிலை விவசாயிகளுக்கு ஏற்றபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க தவறியுள்ள அரசாங்கம் தொடர்ந்தும் அரிசியை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளில் அதிக கவனத்தைச் செலுத்தி தனிப்பட்ட சிலரின் நலன்களைப் பேணுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# மகிந்த-ஹெல உறுமய உடன்படிக்கை நாளைமறுதினம் கைச்சாத்து

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பது தொடர்பாக சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையேயான உடன்படிக்கை நாளைமறுதினம் கைச்சாத்தாகிறது.தலதா மாளிகையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்ததேரரும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளனர். அதன் பின்னர் ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அஸ்கிரிய,மல்வத்தைப் பீடாதிபதிகளை மகிந்தராஜபக்ஷ சந்திப்பார். கடந்த செவ்வாய்க்கிழமை மகிந்தராஜபக்ஷவை ஆதரிக்க நிபந்தனைகளுடனான இணக்கத்தை ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் யுத்தத்தை ஏற்படுத்துவதற்காகவே ராஜபக்ஷவை இனவாதக் கட்சிகள் ஆதரிக்கின்றன

**விக்கிரமபாகு கருணாரட்ன**

(கொழும்பு)

ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும், நாட்டில் மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்துவதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளன என புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இன்று மகிந்த ராஜபக்ஷ 12 அம்சக் கோரிக்கைகளை ஏற்று ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்துள்ளார். மீண்டும் இந்தநாடு யுத்தத்தை நோக்கிச் செல்கின்றது. சுதந்திரக் கட்சி வேட்பாளராக மகிந்த போட்டி இடவில்லை. ஜே.வி.பியின் வேட்பாளராகவேபோட்டி இடுகின்றார். சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மீளக் கட்டி எழுப்புதல், சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் விடுதலைப்புலிகளுடன் ஆரம்பித்தல் போன்றவைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவைகள்யாவையும் பிரதமரின் கூட்டு ஒப்பந்தம் நிராகரித்துள்ளது.என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புலிகளுடன்...

அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குச் சிறிலங்கா அரசுதான் பொறுப்பேற்று தீர்வுகாண வேண்டும் என்று கூறிய அமெரிக்கப்பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோன் ரிச்சாட்சன்,ரெரசிட்டாஸ்கா.'.பர் அம்மையார் கூறிய கருத்துக்களையே வழிமொழிந்து பேசினார். நிகழ்ச்சியில் பேசிய சிறிலங்காவின் சமாதானச்செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும். தற்போதைய அமைதிப்பேச்சு முறையை முற்றிலும் புதியதாக மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது என்றார்.

அமெரிக்க காங்கிரஸ்சார் ஜெரிவெல்லோ, டெனி, டேவிஸ், மற்றும் அமெரிக்காவிற்கான சிறிலங்காத் தூதுவர் போர்னாட்குணதிலக ஆகியோரும் இன் நிகழ்சியில் பங்குகேற்றனர்.

## சந்திரிகா...

கொள்ளவுள்ளனர். அமெரிக்கா செல்லும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு, அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்களுக்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் என்பன குறித்து வெளிநாட்டுத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளார் என சனாதிபதி தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

## அதிகாரத்தை...

விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். மூன்று மாதங்களில் வாக்குறுதிகள் நிறைவேற்றுவதாகக் கூறிய கூட்டமைப்பு ஒரு வாக்குறுதியேனும் நிறைவேற்றாததால் கூட்டணியில் இருந்து விலகி மீண்டும் கூட்டணி அமைத்துக் கொண்டுள்ளதன் மூலம், அதிகாரத்தை பெற்று தமது வரப்பிரசாதங்களை பாதுகாத்துக் கொள்ள முனைவது தெளிவாகத் தெரிவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (32)

## இராணுவக்...

பத்திரிகைச் சட்டத்திற்கு அமைவாக பதிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) ஆசிரியர் பீடம் வெளியிட்டுள்ள அறிக்கையில்

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலையிலிருந்து வெளியாகும் ஈழநாதம் பத்திரிகையைப் படையினர் கட்டுப்பாட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு கடந்த இரண்டு நாட்களாகத் தடைவிதித்துள்ளனர்.

கொக்கட்டிச் சோலையிலுள்ள எமது பணிமனையிலிருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விநியோகப் பணியாளர்கள் பத்திரிகைகளை எடுத்துச் சென்ற போது பட்டிருப்புப் பாலம் மற்றும் மண்முனை இறங்குதுறை ஆகிய இடங்களிலுள்ள விசேட அதிரடிப்படையினர் அவர்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை.

இன்றும் இதேநிலை தொடர்கின்றது.

கடந்த ஒன்றரை வருடமாக எமது பத்திரிகை வெளிவருகின்றது. சிறிலங்காவில் வெளிவரும் பத்திரிகைகள் எவ்வாறு அரச சட்ட திட்டங்களுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்டதோ அதே சட்டங்களுக்கு அமைய இப்பத்திரிகையும் பதிவு செய்யப்பட்டது.

இதுவரை நடுநிலைமை தவறாது பத்திரிகை தர்மத்திற்கு ஏற்ப வெளிவரும் ஈழநாதத்தின் விநியோகத்தைப் படைத்தரப்பு தடை செய்வது என்பது சனநாயக வழிமுறைகளை மீறும் செயல், அவ்வாறு பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை படைத்தரப்பிற்கு எந்த இடத்திலும் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் ஈழநாதத்தின் விநியோகப் பணியாளரான கே. அரசகுமார் கடந்த யூன் மாதம் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியான நிந்தாவூரில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதன் பின்பு விசேட அதிரடிப் படையினர் பல விற்பனை முகவர்களிடம் சென்று பத்திரிகை விற்பனை செய்யக் கூடாது என மிரட்டியுள்ளனர். அதன் தொடராகவே தற்போது விநியோகத்திற்கும் தடை விதித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது. மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.(32)

## ஜே.வி.பி...

தெரிவிக்க விரும்பவில்லை.

ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் குறித்து எனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக அரை மணி நேரம் இது குறித்து மகிந்த ராஜபக்ஷ என்னிடம் பேசினார். ஆனால் நாட்டின் தலைவர் என்கிற வகையில் இந்த ஒப்பந்தம் குறித்து மகிந்த என்னிடம் இப்படித் தெரிவித்தது முறையற்றது. ஜேவி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ அவராகவே தனிப்பட்ட முறையில் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிகழ்வுக்கு தங்களை மகிந்த ராஜபக்ஷ அழைத்திருப்பதாகப்பல சுதந்திரக்கட்சி தலைவர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு தெரிவித்தனர். எனக்கு அது குறித்து எதுவும் தெரியாது. அந்த நிகழ்ச்சிக்குப் போவது உங்களின் தனிப்பட்ட முடிவு என்று கூறிவிட்டேன்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட வியாழனன்று மகிந்த ராஜபக்ஷவை அதுகுறித்து விவாதிக்க தொலைபேசியில் அழைத்தேன். தேர்தல் அறிக்கை ஞாயிற்றுக்கிழமையளவில் இறுதி செய்யப்பட்ட பிறகே பிற கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவரிடம் கூறினேன். சில நாட்களுக்கு முன்னதாக நடைபெற்ற கட்சியின் ஆண்டு மாநாட்டின் போதும் மகிந்த ராஜபக்ஷ விடம் இது தொடர்பில் நீண்ட நேரம் பேசினேன். ஆனால் இந்த ஒப்பந்தம் குறித்து எதையும் என்னிடம் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கவில்லை.

அதேபோல் ஜாதிக ஹெல உறுமயவுடனான ஒப்பந்தத்தையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை வகுக்கும் மத்தியக்குழு அங்கீகரித்துவிடவில்லை.

கட்சியின் தேர்தல் அறிக்கைக் குழுவிற்கு நான் தலைவராகத்தான் இன்னமும் இருக்கிறேன். எங்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் எந்தவித மாற்றமும் இல்லாமலேயே தேர்தல் அறிக்கை இருக்கும்.

நோர்வேயை வெளியேற்றிவிட்டு ஐநா.சபையை இனப்பிரச்சினையில் தலையிட வைப்பது என்ற ஊகங்களுக்கு இடமில்லை. நோர்வேயின் அனுசரணையாளர் பாத்திரம் மிகச் சிறப்பானது. குறிப்பாக ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கியதில் நோர்வேயின்பங்கு பாராட்டிற்குரியது என அவர் தெரிவித்தார்.

எங்களின் எழுச்சி உலகை விழிக்கவைக்கும்
பொங்கி எழுவோம் முல்லை வாழ் மக்களே
முல்லை. மாவட்ட எழுச்சி நாள் செயலணி

# முச்சக்கர வண்டி விபத்தில் சிறுவன் படுகாயம்

கிளிநொச்சியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் சிறுவன் ஒருவன் படுகாய மடைந்துள்ளார்.

கிளிநொச்சி பழையபேருந்து நிலையப் பகுதியில் இருந்து வேகமாக வந்த முச்சக்கரவண்டி காக்காகடைச்சந்தியில் வட்டக்கச்சி நோக்கி திரும்பியபோது முச்சக்கர வண்டி தடம்புரண்டது. இதனால் அம் முச்சக்கரவண்டியில் பயணம் செய்த இராமநாதபுரத்தைச் சேர்ந்த வன்னிய சிங்கம் பிரவீன் என்ற சிறுவனே காலில் படுகாயமடைந்தார். படுகாய மடைந்த சிறுவன் உடனடியாக கிளிநொச்சி மாவட்டவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இச் சிறுவனின் தாயும், சகோதரியும் சிறுகாயங்களுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# பேச்சுக்களுக்கான புதிய இடத்தை சிறிலங்கா அரசாங்கம் முன் வைக்கும்

**நிமால் சிறிபால டி சில்வா**

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்கான புதிய இடத்தை சிறிலங்கா அரசு முன் வைக்க உள்ளதென கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபாடி சில்வா கூறியுள்ளார்.

தொடக்கத்தில் வெளிநாடு ஒன்றில் பேச்சுக்கள் நடத்தலாம் என்று விடுதலைப்புலிகள் கூறினார்கள். அதைஅரசுநிராகரித்த நிலையில் கிளிநொச்சியில் பேச்சுக்களை நடத்தலாம் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஓமந்தையில் அமைதிப் பேச்சுக்களை நடத்தலாம் என்று அரசு தரப்பில் பதிலளிக்கப்பட்டது. ஆனால் கிளிநொச்சி அல்லது வெளிநாட்டில் பேச்சுக்களை நடாத்த விடுதலைப் புலிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் அமைதிப் பேச்சுக்களை நடத்தலாம் என்று நோர்வே யோசனை தெரிவித்துள்ளது. ஆனால் இதை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ள நிலையில்புதிய இடம் குறித்து அரசு தெரிவிக்கும்.

ஊடகங்களில் வெளியானது போல் நோர்வேயை வெளியேற்றி விட்டு ஐநா தலையீட்டை அரசாங்கம் கோரவில்லை. இலங்கை நிலைமைகள் குறித்து ஆய்வு செய்யவே ஐ.நாவிசேட தூதுவர் சிறிலங்கா வருகை தந்தார் என டி.சில்வா கூறினார்.

## ஏறாவூரில்...

அருகாமையிலேயே இந்தக்கைக் குண்டு வீசப்பட்டுள்ளது. குண்டு வெடித்து சிதறியதில் அருகில் இருந்த வீட்டின் யன்னல் கண்ணாடிகள் சேத மடைந்துள்ளன. இச்சம்பவத்துடன் உள்ளூர் ஆயுதக்குழுக்களுக்கு தொடர்புகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## அரசியல்துறை...

அளித்து மீள அழைத்து வருமாறும் இச்சந்திப்பின் போது கோரிக்கை மனு கையளிக் கப்பட்டது.

மக்களின் கோரிக்கை குறித்து கண்காணிப்புக் குழு நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்வதாக கண்காணிப்புக் குழுதரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

## மகிந்த...

துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆலோசனை நடத்தவுள்ளோம். இரு பிரதான அரசியல் கட்சிகளும் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காண என்ன கொள்கை வைத்திருக்கிறார்கள் எனக் கேள்வி எழுப்பியிருந்தோம்.

தற்போது சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ பேரினவாதிகளிடம் சரணடைந்துள்ளார். ஜே.வி.பி விதித்துள்ள 12 நிபந்தனைகளில் முக்கியமான விடயமானது ஒற்றையாட்சி முறையை பற்றியது. தமிழ் தேசிய இனம் 50 ஆண்டு காலத்துக்கு முன்னரே ஒற்றையாட்சியை நிராகரித்து, சமஸ்டி ஆட்சி முறையை வலியுறுத்தியது.சந்திரிகா குமாரதுங்க கூட சமஸ்டி முறையை ஏற்றுள்ளார். ஒஸ்லோ பேச்சுக்களிலும் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது. இந் நிலையில் ஒற்றையாட்சி குறித்து பேசுபவர்கள் பற்றி நாம் ஆராயவே முடியாது.

மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்திலேயே சுயாட்சி என்று முழக்கமிட்ட சிங்கள எடுபிடியாக மாறி இருக்கிற ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா இந்த ஒற்றையாட்சிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் பங்கேற்றுள்ளார்.

அப்படியானால் அவர் மத்தியிலே ஒற்றையாட்சி பிரதேசத்தில் ஊராட்சி என்ற நிலையை மேற்கொண்டு விட்டாரா? அடிமை வாழ்வுக்காக எதையும் அவர் ஏற்றுக்கொண்டு விட்டாரோ? என அவர் கேள்வி எழுப்பினார்.

## வேட்புமனுத்...

தெரிவிக்கப்படுகிறது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் இறுதிப்பந்தியில் இவ்வருடத்தில் சனாதிபதித்தேர்தலை நடத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர், சனாதிபதி 2006 ஆம் ஆண்டு வரை பதவியிலிருப்பது மனித உரிமை மீறல் என உயர்நீதிமன்றில் சமர்ப்பித்த மனுமீதானதாகும்.

திசாநாயக்கவின் மனுவின் பிரதிகள் ஜாதிக ஹெல உறுமயவின் செயலர் ஓமல்பே சோபித்ததேருக்கும், சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தீர்ப்பின் இறுதிப் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயம் சிலவேளை தவறுதலான அச்சுப்பதிவாக இருக்கலாம் என்றும் இதனை தெளிவாக்கி நீதிமன்றம் மீண்டும் அறிவிக்கும்வரை தேர்தலுக்கான திகதி அறிவிப்பதில் தாமதமேற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திரு இங்கிலிஷ் வே—திருநகர்

பல்கலைக்கழக அனுமதி பெற்றோருக்குக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள்
19.09.2005 காலை 9.00 மணிக்கு ஆரம்பம்.
பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்

•••••••• ••••••• •••••••••

2005 டிசெம்பர் O/L பரீட்சைக்கான இலவச ஆங்கில வகுப்புக்கள் 17.09.2005
காலை 9.00 மணிக்கு ஆரம்பம்.

பெயர்களை பதிவு செய்யவும்
15 ஆம் திகதிக்கு முன்

நிர்வாகம்,
மத்தியூஸ் பேக்கரி சந்தி,
திருநகர்.

(தி.12811)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.